# பொதுக்காலம் 29 ஆம் ஞாயிறு

திருவழிபாடு ஆண்டு - A

2020-10-18

**இன்றைய வாசகங்கள்:**

இறைவாக்கினர் எசாயா நூலிலிருந்து வாசகம் 45: 1, 4-6,
திருப்பாடல் 96: 1,3. 4-5. 7-8. 9-10,
திருத்தூதர் பவுல் தெசலோனிக்கருக்கு எழுதிய
முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 1: 1-5,
மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 22: 15-21

## திருப்பலி முன்னுரை:

உங்களுக்கு அருளும், அமைதியும் உரித்தாகுக!

அன்புமிக்க சகோதர சகோதரிகளே! இயேசுவே ஆண்டவர் என்னும் இனிய நாமத்தில் நல் வாழ்த்துக்கள். இன்று பொதுக் காலம் இருபத்தொன்பதாம் ஞாயிறு. சாவை ஒழித்து, மாட்சிமிக்கவரும்: பெரிதும் போற்றத் தக்கவரும்: தெய்வங்கள் அனைத்திற்கும் மேலாக அஞ்சுதற்கு உரியவருமான நம் ஆண்டவரின் திருப்பாதத்தில் ஒன்று கூடியுள்ளோம். நாம் அனைவரும் தந்தையாம் கடவுளோடும் ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவோடும் இணைந்து வாழ்ந்து, வாழ்வின் வார்த்தையைப் பற்றிக் கொண்டு. உலகில் ஒளிரும் சுடர்களாகத் துலங்க வேண்டுமென இறைவன் விரும்புகின்றார். அதற்கான ஆற்றலையும், வலிமையையும் அவரே தருகின்றார். அத்தோடு நாம் இறைவனுக்குரியதை அவருக்குக் கொடுக்க வேண்டுமென்ற ஒரு ஆழமான அறிவுறுத்தலும் நமக்குக் கொடுக்கப்படுகின்றது.

இந்தச் சிந்தனைகளை உள் வாங்கிய நாம், வாழ்வின் வார்த்தையைப் பற்றிக் கொண்டு, தூய கோலத்துடன் ஆண்டவரை வழிபட்டு, உலகில் ஒளிரும் சுடர்களாகத் துலங்கி, “ஆண்டவரே ஆட்சி செய்கின்றார்: அவர் மக்களினங்களை நீதி வழுவாது தீர்ப்பிடுவார். என்னும் உண்மையை நம் வாழ்வால் எடுத்துரைத்து, ஆண்டவரை மாட்சிமைப்படுத்த வரம் கேட்டுத் தொடரும் பலியில் பங்கேற்போம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.
பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**அன்பின் அரசரே இறைவா,**
உமது திருப்பொழிவைப் பெற்றுக்கொண்ட எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள், அனைவருக்காகவும் மன்றாடுகின்றோம்: அவர்கள் ஒவ்வொருவரும் வாழ்வுதரும் உம் வார்த்தைகளை உறுதியுடன் பற்றிக் கொண்டு. உலகில் ஒளிரும் சுடர்களாகத் துலங்கி, நல்ல வழிகாட்டிகளாகத் திகழ்ந்திட வேண்டிய சக்தியையும், ஆற்றலையும் அவர்களுக்கு அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**என்றென்றும் எமக்குத் துணைசெய்யும் தந்தையே!**
உமது வாழ்வுதரும் வார்த்தைகளைத் திரிவுபடுத்தி, தவறான விளக்கங்களைக் கொடுத்து, பிரிவினைகளோடும் பிளவுகளோடும் வாழும் அனைவரும் உமக்குள் ஒன்றுபட்டு இறையரசைக் கட்டியெழுப்பிடச் செய்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**விண்ணுலகினின்று கண்ணோக்கிப் பார்க்கும் தந்தையே இறைவா!**
இன்று கவலை, நோய், துன்பம் போன்ற வற்றிலிருந்து விடுதலை பெறத் தவித்துக் கொண்டிருக்கும் அனைத்து மக்களும் நீர் கொடுக்கின்ற ஆறுத லைப் பெற்றுக் கொள்ளவும், இயற்கை, செயற்கை அழிவுகளிலிருந்து அவர்களைப் பாதுகாத்திடவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**நலமும் வளமும் தந்தருளும் எம் இறைவா!**
எங்கள் மாணவசெல்வங்கள் அனைவரும் இந்த தொற்று நோய்காலத்தில் பள்ளிக்கு சென்று கல்வி பயிலும் முறையின்றி கூண்டுக்குள் அடைப்பட பறவை போல தத்தளிக்கும் மனநிலையிலிருந்து விடுபடவும், அதற்கு ஏற்றநிலையை விரைவில் உருவாக தேவையான ஞானத்தையும், சக்திகளையும் அனைவரும் பெற்று மகிழ்வுடன் வாழ வேண்டுமென்று இறைவா! உம்மை மன்றாடுகின்றோம்.

**பரிவுள்ளம் உடையவரான தந்தையே இறைவா!**
எம் குடும்பங்களில் உள்ள அனைவரும் வார்த்தையால் மட்டுமல்ல, செயலாலும் உமது திருவுளத்தை நிறைவேற்றி வாழவும், சிறப்பாக, ஏழைகள் மீது அக்கறை கொண்டு, அவர்களது நல்வாழ்வுக்காக உழைக்கவும் இவ்வாறு எங்கள் வாழ்வுப் பிறர்க்கு எடுத்துக்காட்டாக அமையவும் உமதருள் வேண்டுமென்று இறைவா! உம்மை மன்றாடுகின்றோம்

**எம் குற்றங்களையும், குறைகளையும் நினையாத எம் இறைவா!**
இந்தத் தொற்றுநோய் காலத்தில் உமது மக்களாகிய நாங்கள் படும் துன்பங்களை நீர் அறிவீர். விரைவில் நாங்கள் இதிலிருந்து விடுபடவும், அனைவரும் மீண்டும் தம் வளமையான வாழ்விற்குத் திரும்பத் தேவையான சூழலைத்தர வேண்டியும், மாணவச்செல்வங்கள் நல்ல மனநிலையும், ஞானத்தையும் பெற்று நிம்மதியாகக் கல்விக் கற்றுத் தேர்ந்திடவும் உமது அருளைப் பொழியுமாறு இறைவவா உம்மை மன்றாடுகிறோம்.

**நலம் அளிக்கும் வல்லவரே! எம் இறைவா!**
தொற்றுநோயின் தாக்கத்திலிருந்து எங்களைக் காத்துவந்தவரே, நோயின் வீரியம் குறைந்து மக்கள் அனைவரும் நலமுடனும், வளமுடனும் வாழத் தேவையான அருளையும், குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை அனைவரும் தொற்றுநோயினால் ஏற்பட்ட மனஅழுத்தத்திலிருந்து விடுபடவும் தேவையான நல்ல சுகாதார, வளமான நல்ல சூழ்நிலையைத் தரவேண்டுமென்று இறைவா! உம்மை மன்றாடுகிறோம்.